# யாவரும் கேளிர் TNPSC & TET STUDY CENTRE

மதுரைமுக்கு (குமரன் மெஸ் முதல் தளம்), சிவகங்கை.

Cell: 7094590916, 9585208323 & www.facebook.com/Yaavarummkelir


| | |
|---|---|
| TAMIL (6TH & 7TH) | - 75 Questions |
| MATHS ( TIME & WORK) | - 25 Questions |
| TIME DURATION | - 90 Minutes |
| DATE | - 13/08/2017 |

## தமிழ் :- (6th மற்றும் 7th)

**1. பெரியாருக்கு யுனஸ்கோ விருது - அஞ்சல் தலை எப்போது வழங்கப்பட்டது?**
A) 1938 – 1970 B) 1970 – 1979
C) 1970 – 1978 D) 1978 – 1970

**2. தேவருக்கு "தேசியம் காத்த செம்மல்" எனப் பெயரிட்டவர்?**
A) உ.வே.சா B) நேதாஜி
C) திரு.வி.க D) தா.ரா

**3. மனிதன் மனநிலையை வரிசைப்படுத்துக.**
A) அருள், இருள், தெருள், மருள்
B) மருள், தெருள், இருள், அருள்
C) இருள், அருள், மருள், தெருள்
D) இருள், மருள், தெருள், அருள்

**4. வினா எழுத்தில் அழுத்தத்தை தரும் சொல்?**
A) ஆ B) யா C) ஏ D) ஓ

**5. தாராசுரம் ஐராதீஸ்வரர் கோயில் கீழ்க்கண்ட யாரால் கட்டப்பட்டது அது எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது**
A) 1ம் இராஜராஜன்/900 ஆண்டுகள்
B) 2ம் இராஜராஜன்/800 ஆண்டுகள்
C) 2ம் இராஜேந்திரன்/800 ஆண்டுகள்
D) 1ம் குலோத்துங்கன்/900 ஆண்டுகள்

**6. கட்டிட கலை வான்வெளி இரகசியத்தை காட்டுவதாகக் கூறும் வானவியல் அறிஞர்?**
A) அதிபத்தார் B) அமர்சேன்
C) கார்ல்சேகன் D) தொல்சேனார்

**7. முதல் ஆழ்வார்களால் பாடப்பட்ட தலம்?**
A) சென்னை B) திருவாடுதுறை
C) திருவல்லிக்கேணி D) நரிமேடு

**8. 'பதுமத்தான்' எனக் குறிப்பிடுபவர்?**
A) இந்திரன் B) தேவர்
C) பிரம்மன் D) தலைவன்

**9. பொருந்தாதது?**
A) படிறு - வஞ்சம்
B) சிறுமை - துன்பம்
C) வதுவை - மறுமணம்
D) மருங்கு - பக்கம்

**10. அகர வரிசைப்படுத்துக**
A) அன்பு, பாசம், வேசம், துன்பம், வேதனை, சாதனை
B) அன்பு, வேசம், பாசம், வேதனை, துன்பம், சாதனை
C) அன்பு, வேதனை, துன்பம், சாதனை, பாசம், வேசம்
D) அன்பு, சாதனை, துன்பம், பாசம், வேசம், வேதனை

**11. தென்னிந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டவர்?**
A) திலகர் B) தேவர்
C) பாரதியார் D) பெரியார்

**12. நான்கு கருத்துக்களை பற்றி கூறும் நூல்?**
A) பழமொழி B) நான்மணிக்கடிகை
C) திருக்குறள் D) சிலேடை

**13. "என்பு" என்பதன் பொருள்?**
A) Soul B) Bone C) Friends D) Body

**14. பிரித்து எழுதுக. வன்பாற்கண்**
A) வன் + பால் + கண்
B) வன்பாட் + கண்
C) வன் + பாட் + கண்
D) வன்பால் + கண்

**15. குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர்?**
A) உ.வே.சா B) பரணர்
C) கபிலர் D) மாங்குடி மருதனார்

**16. உ.வே.சா பதிப்பித்த வெண்பா நூல்கள் எண்ணிக்கை?**
A) 10 B) 11 C) 12 D) 13

**17. திருக்குறளில் உள்ள மொத்த இயல்கள்?**
A) 5 B) 9 C) 7 D) 11

**18. "எண்ணித் துணிக கர்மம்" எனக் கூறியவர்?**
A) திருவள்ளுவர் B) ஔவையார்
C) பாரதியார் D) உடுமலை நாராயணகவி

**19. சமண முனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு?**
A) நான்மணிக்கடிகை B) நாலடியார்
C) அகநானூறு D) புறநானூறு

**20. "நீதி நெறியின்று பிறர்க்குதவும் நேர்மையர் மேலவர் : கீழவர் மற்றோர்" என பாடியவர்?**
A) தாராபாரதி B) பாரதியார்
C) பட்டுக்கோட்டையார்
D) விளம்பிநாகனார்

**21. 'போரும் அமைதியும்' என்ற நூலின் ஆசிரியர்?**
A) டால்ஸ்டாய் B) பெர்னாட்ஷா
C) மில்டன் D) பிளேட்டோ

22. 'கள்ள வேடம் புனையாதே – பல கங்கையிலே உன் கடம் நனையாதே' – பாடியவர்?
A) ஔவையார் B) பாரதிதாசன்
C) கடுவெளிசித்தர் D) தாராபாரதி

23. தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள்?
A) 11 B) 12 C) 13 D) 14

24. சாகுந்தலம் என்னும் நாடகத்தின் ஆசிரியர்
A) மறைமலையடிகள்
B) காளிதாசர்
C) மூன்றுரை அரையனார்
D) ராமச்சந்திரக் கவிராயர்

25. "பத்தினி மார்களைப் பழித்துக் காட்டாதே" என்னும் பாடல் வரிகளை இயற்றியவர்
A) பாரதியார் B) தாராபாரதி
C) பாரதிதாசன் D) கடுவெளிச் சித்தர்

26) மாக்கவிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்த கவிஞரின் இயற்பெயர்
A) வரதன் B) வேங்கடரத்தினம்
C) வேங்கடமகாலிங்கம் D) துரைமாணிக்கம்

27) பொருந்தாததைத் தேர்ந்தெடு: "ஆழி"
A) மோதிரம் B) கடல்
C) சக்கரம் D) கலப்பை

28) வரிசைப்படுத்துக
A) உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், களையெடுத்தல், உரமிடுதல், காத்தல்
B) உழுதல், விதைத்தல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், களையெடுத்தல், காத்தல்
C) உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், உரமிடுதல், களையெடுத்தல், காத்தல்
D) உழுதல், விதைத்தல், களையெடுத்தல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், காத்தல்

29) பொருத்துக
A) நெல் 1. வண்டியோட
B) கரும்பு 2. நண்டோட
C) வாழை 3. தேரோட
D) தென்னை 4. ஏரோட

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

30) வினையையும், பெயரையும், வினாவையும், பயனிலையாகக் கொண்டு முடியும் வேற்றுமை எது ?
A) இரண்டாம் வேற்றுமை
B) முதலாம் வேற்றுமை
C) விளி வேற்றுமை
D) மூன்றாம் வேற்றுமை

31) தவறான இணையைத் தேர்ந்தெடு
A) ஐதீகம் - உலக வழக்கு
B) இருதயம் - நெஞ்சகம்
C) எதார்த்தம் - தீடீர் நிகழ்வு
D) கீரிடம் - மணிமுடி

32) ரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புகளில் அல்லாதது எது ?
A) தமிழ் விருந்து B) தமிழின்பம்
C) ஊரும் பேரும் D) தமிழ் இனிமை

33) இனமுள்ள அடைமொழிகளில் அல்லாதது எது ?
A) வெண்முகில் B) செங்கல்
C) செந்தமிழ் D) கருநிலவு

34) தொட்டனைத்து ஊறும் <u>மணற்கேணி</u> மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு
- எனும் குறட்பாவில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் தருக
A) நீர் சுரக்கும் இடம் B) அறிவு
C) நீர் ஊற்று D) அறியாமை

35) முக்கூடற்பள்ளுவின் பா வகை
A) வெண்பா B) ஆசிரியப்பா
C) சிந்து விருத்தம் D) கலிப்பா

36) ஏறுதழுவுதல் எனும் வீரவிளையாட்டு எந்நிலத்தில் நடைபெறும்
A) குறிஞ்சி B) முல்லை
C) மருதம் D) நெய்தல்

37) "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என முழங்கியவர்
A) ரா.பி. சேதுப்பிள்ளை B) பாரதிதாசன்
C) பாரதியார் D) கவிமணி

38) மனிதன் நாகரிகம் நடைபெறுவதற்கு முதற்கருவியாக விளங்கியது எது ?
A) உணவு B) உடை
C) மொழி D) சிற்பம்

உன்னை ஒருவனாலும் தோற்கடிக்க முடியாது
உன் நம்பிக்கையில் நீ தோற்கும் வரை
- நேதாஜி


For More Model Questions Visit - www.tnpscjob.com

39) பொருத்துக
A) கா - 1. அம்பு
B) சோ - 2. சோலை
C) ஏ - 3. அரண்
D) ஐ - 4. தலைவன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

40) "தமிழுண்டு தமிழ் மக்களுண்டு இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்று பாடியவர்
A) பாரதிதாசன் B) பாரதியார்
C) வாணிதாசன் D) மு.வ

41) "மணநூல்" என அழைக்கப்படும் நூல்
A) சீவகசிந்தாமணி B) சிலப்பதிகாரம்
C) மணிமேகலை D) மனோன்மணியம்

42) தனித்தியங்காமல் செய்யுளுக்கு உரிமைபெற்று வருபவை
A) பெயர்ச்சொல் B) வினைச்சொல்
C) உரிச்சொல் D) இடைச்சொல்

43) எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி எனக் கூறும் நூல் எது
A) மதுரைக்காஞ்சி B) பரிபாடல்
C) குறுந்தொகை D) தொல்காப்பியம்

44) உலகியல் உண்மைகளை தெளிவாக எடுத்துக் கூறும் நூல்
A) திருக்குறள் B) தனிப்பாடல் திரட்டு
C) முதுமொழிக்காஞ்சி D) திரிகடுகம்

45) "ஓவத்தனைய இடனுடை வனப்பு" என்று ஓவியக்கலையை சிறப்பிக்கும் நூல்
A) பரிபாடல் B) குறுந்தொகை
C) சிலப்பதிகாரம் D) புறநானூறு

46) திருநந்திக்கரை ஓவியங்கள் யாருடைய காலத்தை சேர்ந்தது
A) சேரர் B) சோழர்
C) பாண்டியர் D) பல்லவர்

47) "தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்" இப்பாடலில் பயின்று வரும் அணி
A) தற்குறிப்பேற்ற அணி
B) பிறிதுமொழிதல் அணி
C) உயர்வு நவிற்சியணி
D) இயல்பு நவிற்சியணி

48) திருவாரூர் நான்மணிமாலையில் இடம்பெறாத "பா" வகை எது ?
A) வெண்பா B) வஞ்சிப்பா
C) கலிப்பா D) ஆசிரியப்பா

49) குன்றின்மேலிட்ட விளக்காக சமுதாயத்தில் விளங்கச் செய்யும் நூல்
A) திருக்குறள்
B) திருவாரூர் நான்மணிமாலை
C) திரிகடுகம்
D) சீவகசிந்தாமணி

50) பம்மல் சம்பந்தனார் சுகுணவிலாச சபையை தொடங்கிய ஆண்டு
A) 1891 B) 1898 C) 1881 D) 1888

51) "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்" என்று கூறியவர்
A) பாவாணர் B) மு.வ
C) பரிதிமாற்கலைஞர் D) வள்ளலார்

52) பொருந்தாதைத் தேர்ந்தெடு
A) வளையல் B) பறவை
C) முக்காலி D) அரிவாள்

53) கீழ்க்கண்டவற்றுள் எது சரி ?
A) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா
B) பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது
C) அரசர் பலர் வந்தார்கள்
D) ஔவையார் அதியமானிடம் பரிசில் பெற சென்றனர்

54) பொருத்துக
A) இரவலர்க்கு குதிரை - 1. பேகன்
B) இல்லறத்திற்கு பொருள் - 2. ஓரி
C) கூத்தர்க்கு நாடு - 3. நள்ளி
D) மயிலுக்கு போர்வை - 4. காரி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 1 | 3 | 2 | 4 |

55) கீழ்க்கண்டவற்றுள் குமரகுருபரர் எழுதாத நூல்
A) மதுரைக்கலம்பகம் B) காசிக்கலம்பகம்
C) நீதிநெறி விளக்கம் D) கந்தர் அநுபூதி

56) பாவலர் மணி எனும் புனைப்பெயர் கொண்டு அழைக்கப்படுபவர்
A) பெருஞ்சித்திரனார் B) வாணிதாசன்
C) பாரதிதாசன் D) கண்ணதாசன்


For More Model Questions Visit - www.tnpscjob.com

**57) “தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை” என மதுரையை சிறப்பிக்கும் நூல்**
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) சிறுபாணாற்றுப்படை D) நெடுநல்வாடை

**58) “வணங்காமுடி” எனும் புனைப்பெயரை கொண்டவர் யார் ?**
A) கண்ணதாசன் B) பாரதியார்
C) பாரதிதாசன் D) பெரியார்

**59) பொருத்துக**
A) முட்டு 1. குற்றம்
B) புரை 2. குவியல்
C) தூறு 3. உருவம்
D) பதுமை 4. புதர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 2 | 3 | 1 | 4 |

**60) “திரைக்கவித்திலகம்” என அழைக்கப்படுபவர்?**
A) மருதகாசி
B) நா.பிச்சமூர்த்தி
C) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
D) கண்ணதாசன்

**61) அகரவரிசையில் அமைத்து எழுதுக**
A) தேக்கம், பச்சை, தேங்காய், மஞ்சை, வட்டம்
B) தேங்காய், தேக்கம், பச்சை, மஞ்சை, வட்டம்
C) தேக்கம், தேங்காய், பச்சை, மஞ்சை, வட்டம்
D) பச்சை, மஞ்சை, தேக்கம், தேங்காய், வட்டம்

**62) பின்வருவனவற்றுள் எது மூன்று காலங்களில் ஒன்றனை மட்டும் உணர்த்தும்**
A) வினைமுற்று B) வினையெச்சம்
C) பெயரெச்சம் D) முற்றெச்சம்

**63) தவறானது எது ?**
A) அவரைப்பிஞ்சு B) மலர் பறி
C) பழம் தின் D) மான் கன்று

**64) நான்காம் தமிழ்சங்கத்தை தோற்றுவித்தவர்**
A) பாஸ்கர சேதுபதி B) பாண்டித்துரையார்
C) பொன்னுசாமி D) முத்துராமலிங்கனார்

**65) இனிமை என்னும் பொருள் தரக்கூடிய மதுரை மாநகரை “நான்மடக்கூடல்” என மேலும் சிறப்புச் செய்தவர் யார் ?**
A) பரஞ்சோதியார் B) இளந்திருமாறன்
C) கண்ணகனார் D) நக்கீரனார்

**66) “எளிதில் பேசவும் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்த மொழி தமிழ் ஒன்றே” என கூறியவர்**
A) வள்ளலார் B) பரிதிமாற்கலைஞர்
C) பாவாணர் D) பாண்டித்துரையார்

**67) “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ” என தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் நூல்**
A) தொல்காப்பியம் B) மதுரைக்காஞ்சி
C) குறுந்தொகை D) பரிபாடல்

**68) “உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்” என்று பாடியவர்**
A) வள்ளலார் B) பாரதியார்
C) திருவள்ளுவர் D) தொல்காப்பியர்

**69) “வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே” என்று பாடியவர்**
A) பொன்முடியார் B) ஔவையார்
C) நல்லூர்நத்தனார் D) மோசிகீரனார்

**70) ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும் விண்மீன்களையும் வரைந்த செய்தி பற்றிக் கூறும் நூல்**
A) நெடுநல்வாடை B) சிறுபாணாற்றுப்படை
C) சிலப்பதிகாரம் D) தட்சிண சித்திரம்

**71) “எறும்புந்தன் கையால் எண்சாண்” என்றவர்**
A) தமிழ்மகள் B) கலைமகள்
C) கலைமடந்தை D) நிலமகள்

**72) இராமனுஜன்தான் 20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை எனப் புகழ்ந்தவர் யார் ?**
A) இந்திராகாந்தி B) சூலியன் கக்சுலி
C) லார்ட்மெண்ட் லண்ட் D) ஈ.டி.பெல்

**73) மிக வேகமாக செய்யுள் நூல் இயற்றுவதில் வல்லவராக திகழ்ந்தவர் யார் ?**
A) மீனாட்சி சுந்தரனார் B) தெ.பொ.மீ
C) வள்ளலார் D) பரஞ்சோதி

**74) கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது ?**
A) எட்டு பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் மட்டும் வல்லினம் மிகும்
B) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகும்
C) பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகாது
D) அகர ஈற்று வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகாது

**75) கோவூர்கிழார் எந்த மன்னரின் அரசவை புலவராக திகழ்ந்தார்**
A) திருமுடிக்காரி B) கிள்ளிவளவன்
C) நற்கிள்ளி D) நலங்கிள்ளி



For More Model Questions Visit - www.tnpscjob.com

**கணிதம்** :- (நேரம் மற்றும் வேலை)

76) 20 ஆட்கள் 6 நாட்களில் 112மீ நீளமுள்ள சுவரை கட்டி முடித்தால் 25 ஆட்கள் 3 நாட்களில் எவ்வளவு நீளச் சுவரைக் கட்டி முடிப்பர் ?
Answer:-

77) 6 ஆண்கள் ஒரு வேலையை நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்து, 24 நாட்களில் முடிப்பர். 9 ஆண்கள், நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்தால், எத்தனை நாட்களில் அவ்வேலையை முடிப்பர் ?
Answer:-

78) 12 தச்சர்கள் நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்து சில மர வேலைகளை 18 நாட்களில் செய்து முடிக்கின்றனர். இதே வேலையை 15 தச்சர்கள் நாளொன்றுக்கு 6 மணி நேரம் வேலை செய்தால் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர் ?
Answer:-

79) 80 தானியங்கி இயந்திரங்கள் ஒரே மாதிரியான 4800 கைப்பேசிகளை 6 மணியில் தயாரிக்கின்றன. ஒரு தானியங்கி இயந்திரம், ஒரு மணி நேரத்தில் எத்தனை கைப்பேசிகளை தயாரிக்கும் ? 25 தானியங்கி இயந்திரங்கள் 5 மணி நேரத்தில் எத்தனை கைப்பேசிகளை தயாரிக்கும் ?
Answer:-

80) 14 அச்சுக் கோர்ப்பவர்கள், 5 மணி நேரத்தில் ஒரு புத்தகத்தின் 70 பக்கங்களை முடிப்பர். 10 மணி நேரத்தில், 100 பக்கங்களை முடிக்க எத்தனை அச்சுக் கோர்ப்பவர்கள் தேவை ?
Answer:-

81) 2400 ச.மீ நிலத்தை 12 வேலையாட்கள் 10 நாட்களில் உழுது முடிப்பர். 5400 ச.மீ நிலத்தை 18 நாட்களில் உழுவதற்கு எத்தனை வேலையாட்கள் தேவை ?
Answer:-

82) சுவாதி ஒரு நாளுக்கு 4 மணி நேரம் வேலை செய்து, 5 சேலைகளுக்கு 18 நாட்களில் எம்பிராய்டரி வேலை செய்து முடிப்பார். அவர் 10 சேலைகள் எம்பிராய்டரி செய்வதற்கு நாள்தோறும் 6 மணி நேரம் வேலை செய்தால், எத்தனை நாட்களில் வேலையைச் செய்து முடிப்பார் ?
Answer:-

83) ரூ 2500ஐ வங்கியில் 6 மாதங்களுக்குச் செலுத்தினால் வங்கி ரூ 100ஐ வட்டியாகத் தருகின்றது. ரூ 3200ஐ அதே வட்டி வீதத்தில், 9 மாதங்கள் செலுத்தினால், கிடைக்கும் வட்டி என்னவாக இருக்கும் ?
Answer:-

84) A என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், B என்பவர் அதே வேலையை 30 நாட்களிலும் செய்து முடிப்பார்கள். அவ்விருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும் ?
Answer:-

85) ஒரு வேலையை A,B இருவரும் சேர்ந்து 8 நாட்களில் முடிப்பர். A மட்டும் அவ்வேலையை 12 நாட்களில் முடிப்பார். B மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார் ?
Answer:-

86) A ஒரு வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பார். B அதே வேலையை 20 நாட்களில் செய்து முடிப்பார். A,B இருவரும் சேர்ந்து அவ்வேலையை 3 நாட்கள் செய்தனர். பின் A சென்று விட்டார். மீதி வேலையை B எத்தனை நாட்களில் முடிப்பார் ?
Answer:-

87) A ஒரு வேலையை 10 நாட்களிலும், B அதை 15 நாட்களிலும் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து ரூ 1500ஐ ஈட்டினால், அத்தொகையை எவ்வாறு பிரித்துக் கொள்வர் ?
Answer:-

88) A,B இருவரும் ஒரு வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பர். B,C அதே வேலையை 15 நாட்களில் செய்து முடிப்பர். C,A அதே வேலையை 20 நாட்களில் செய்து முடிப்பர். மூவரும் சேர்ந்து மற்றும் தனித்தனியாகவும் அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர் ?
Answer:-

89) ஒரு தொட்டியை இரு குழாய்கள் தனித்தனியே முறையே 30 நிமிடங்கள், 40 நிமிடங்களில் நிரப்புகின்றது. மற்றொரு குழாய் நீர் நிரம்பிய தொட்டியை 24 நிமிடங்களில் காலி செய்யும். தொட்டி காலியாக இருந்து இம்மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்து விடப்பட்டால், அத்தொட்டி எத்தனை நிமிடங்களில் நிரம்பும் ?
Answer:-

90) ஓர் ஆண் ஒரு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பார். ஆனால் ஒரு பெண் அதே வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பார். இவ்விருவரும் சேர்ந்து வேலை செய்தால், அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர் ?
Answer:-


For More Model Questions Visit - www.tnpscjob.com

91) இரண்டு சிறுவர்கள் ஒரு வேலையைச் சேர்ந்து செய்யும்பொழுது, 10 நாட்களில் முடிப்பர். முதல் சிறுவன் அவ்வேலையைத் தனியே 15 நாட்களில் முடித்தால், இரண்டாம் சிறுவன் தனியே அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பார் ?

Answer:-

92) A,B,C என்ற மூவர் ஒரு வேலையை முறையே 8,6,12 நாட்களில் முடிப்பார்கள். A,B இருவரும் சேர்ந்து அவ்வேலையை 3 நாட்களுக்கு செய்தனர். பின்னர் B விலகுகின்றார், C சேருகின்றார். A,C ஆகிய இருவரும் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்கள் ?

Answer:-

93) A என்ற குழாய் ஒரு பெரிய பாத்திரத்தைத் தனியே 10 நிமிடங்களில் நிரப்பும். B என்ற குழாய் அதே பாத்திரத்தைத் தனியே 20 நிமிடங்களில் நிரப்பும். நீர் நிரப்பியுள்ள அப்பாத்திரத்தை C என்ற குழாய் 15 நிமிடங்களில் காலி செய்யும். ஆரம்பத்தில் பாத்திரம் காலியாக இருந்து, இம்மூன்று குழாய்களையும் திறந்தால், அப்பாத்திரம் நிரம்ப எவ்வளவு நேரமாகும் ?

Answer:-

94) A,B,C என்பர் ஒரு வேலையை முறையே 12,24,8 நாட்களில் முடிப்பார்கள். இம்மூவரும் சேர்ந்து ஒரு நாள் வேலை செய்தனர். பின் C விலகி விடுகிறார் எனில், A,B இருவரும் மீதமுள்ள வேலையை முடிக்க ஆகும் நாட்கள் எத்தனை ?

Answer:-

95) A ஒரு வேலையை 20 நாட்களிலும், B அதே வேலையை 30 நாட்களிலும் முடிப்பர். இருவரும் சேர்ந்து வேலை செய்து, அவ்வேலையை முடித்து ரூ 600ஐ தங்கள் வருவாயாகப் பெற்றனர் எனில் அவர்கள் ஒவ்வொருவரும் பெறும் தொகை எவ்வளவு ?

Answer:-

96) ஒரு குழாய் காலியாக உள்ள தொட்டியை 15 நிமிடங்களில் நிரப்பும். மற்றொரு குழாய் நீர் நிரம்பியுள்ள அத்தொட்டியை 20 நிமிடங்களில் காலி செய்யும். ஆரம்பத்தில் தொட்டி காலியாக இருந்து, இரு குழாய்களும் ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டால், அத்தொட்டி எவ்வளவு நிமிடங்களில் நிரம்பும் ?

Answer:-

97) 10 குழாய்கள் 24 நிமிடத்தில் ஒரு தொட்டியை நிரப்புகின்றன அதில் 2 குழாய்கள் பழுது ஆகிவிட்டால் மீதமுள்ள குழாய்கள் எவ்வளவு நேரத்தில் தொட்டியை நிரப்பும் ?

Answer:-

98) 2 ஆட்கள் ஒரு வேலையை 9 நாட்களில் முடிப்பார்கள் அதே வேலையை போல் இரு மடங்க வேலையை 12 நாட்களில் முடிக்க எத்தனை ஆட்கள் அதிகமாக தேவைப்படுவர் ?

Answer:-

99) A,B யை விட இரு மடங்கு வேகமாக வேலையை செய்யக் கூடியவர் இருவரும் சேர்ந்து ஒரு வேலையை 12 நாட்களில் முடித்தால் B மட்டும் தனியாக எத்தனை நாட்களில் முடிப்பர் ?

Answer:-

100) A மற்றும் B 8 நாட்களிலும், B மற்றும் C 12 நாட்களிலும் A,B,C மூவரும் சேர்ந்து 6 நாட்களிலும் முடித்தால் A மற்றும் C சேர்ந்து எத்தனை நாட்களில் முடிப்பர் ?

Answer:-

யாவரும் கேளிர்
TNPSC



For More Model Questions Visit - www.tnpscjob.com

யாவரும் கேளிர் TNPSC & TET STUDY CENTRE
மதுரைமுக்கு (குமரன் மெஸ் முதல் தளம்), சிவகங்கை.
Cell: 7094590916, 9585208323 & www.facebook.com/Yaavarummkelir

For More Model Questions Visit - www.tnpscjob.com

# YAAVARUM KELIR TNPSC TEST WEEK 1
## TAMIL ($6^{TH}$ & $7^{TH}$), MATHS (TIME & WORK)
## Answer Key

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) C | 11) B | 21) A | 31) C | 41) A | 51) C | 61) B | 71) A |
| 2) C | 12) B | 22) C | 32) D | 42) C | 52) A | 62) A | 72) B |
| 3) B | 13) B | 23) C | 33) D | 43) A | 53) A | 63) B | 73) A |
| 4) C | 14) D | 24) A | 34) A | 44) C | 54) B | 64) A | 74) D |
| 5) B | 15) C | 25) D | 35) C | 45) D | 55) D | 65) A | 75) D |
| 6) C | 16) D | 26) C | 36) B | 46) A | 56) B | 66) A | |
| 7) C | 17) B | 27) D | 37) C | 47) D | 57) C | 67) A | |
| 8) C | 18) A | 28) B | 38) C | 48) B | 58) A | 68) B | |
| 9) C | 19) B | 29) D | 39) A | 49) C | 59) A | 69) D | |
| 10) D | 20) B | 30) B | 40) A | 50) A | 60) A | 70) A | |

## TIME & WORK ANSWERS

| | | | | |
|---|---|---|---|---|
| 76) 70 | 77) 20 | 78) 24 | 79) 10,1250 | 80) 10 |
| 81) 15 | 82) 24 | 83) 192 | 84) 12 | 85) 24 |
| 86) 12 | 87) 900,600 | 88) A+B+C = 10, A=30, B=20, C=60 | | 89) 60 Minutes |
| 90) 3 | 91) 30 | 92) 2 | 93) 12 Min | 94) 6 |
| 95) A=360, B=240 | 96) 1 Hour | 97) 30 | 98) 1 | 99) 36 |
| 100) 6 | | | | |